

## சூழல் உணர்திறன்

பிரதேசங்கள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றையும் உபாயங்களையும் தயாரித்தல்

உயிர்ப்பல்வகைமை தன்மையின் பாதுகாப்பை அதிகரிப்பதோடு நாட்டின் மக்களின் வாழ்க்கையை பாதுகாத்தல். இலங்கையில் சூழல் உணர்திறன் பிரதேசங்கள் தொடர்பாக காணப்படும் அறிவினை வளர்த்தல்

புதிய காணி பாவனை கட்டமைப்பொன்று தயாரித்தல் அரச பணியாட்கள் மற்றும் உள்நாட்டு மக்களின் திறமைகளை வளர்த்தல்

சமூகம் சார்ந்த அமைப்பு, சிவில் சமூக அமைப்பு, ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் உள்ளிட்ட பங்குதாரர்களுக்கிடையில் ஒத்துழைப்பை வளர்த்தல்

பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பூமியின் பெறுமதியை ஒன்று சேர்க்கின்ற சூழல் அமைப்பு முகாமைத்துவத்தை இணைத்தல்

மனிதனுக்கும் வன விலங்குகளுக்குமிடையில் காணப்படும் மோதல்களுக்கு தீர்வு வழங்கக்கூடிய தேசிய கொள்கை மேம்படுத்தல்

நெற்பயிர்செய்கை தொடர்பாக சூழலுக்கு ஏற்ற விவசாயம், சேனைப்பயிர்செய்கை மற்றும் வீட்டுத்தோட்ட பயிரச் செய்கையை வளர்ப்பதற்கு விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகளுக்கு தேவையான உதவி வழங்குதல்.





## பச்சை பசுமையான யுகத்தை நோக்கி


மதிப்புக்குரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் நீண்ட கால சூழல் பாதுகாப்பத்திட்டத்தின் கீழ மாதிரித்திட்டமாக கலாஓயா ஆற்றுத் தளம் அருகில் சூழல் உணர்த்திறன் பிரதேசங்களை கேந்திரமாகக்கொண்டு 2015 ஒக்டோம்பர் 1 ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம் 5 வருட காலங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

பாதுகாப்பு பிரதேசமாக அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசத்திற்கு வெளியில் காணப்படும் சூழல் வலய சேவைகள் மற்றும் உயிர்ப்பல்வகைமை தன்மையில் மிக முக்கியமான சூழல் உணர்த்திறன் வலயத்தை முகாமைத்துவப்படுத்துவதற்காக நிர்வாக மற்றும் சட்ட கட்டமைப்பு மற்றும் வழிகாட்டலை உள்ளடக்கி தேசிய மட்டத்தில் சூழல் உணர்த்திறன் பிரதேசங்கள் முகாமைத்துவத்திற்கு தேவையான கட்டுப்பாட்டு கட்டமைப்பு அமைக்கப்படும். அதனூடாக அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் பிரிவினூடாக மக்களை விழிப்புணர்வூட்டி, சூழல் உணர்த்திறன் பிரதேசங்களின் முகாமைத்துவத்தின் பங்குதாரிகளாக இவர்களை உருவாக்குதோடு, பாதுகாப்பு பிரதேசம் மற்றும் சூழல் உணர்த்திறன் பிரதேசங்களுக்குள் நிரத்தர சமூக, பொருளாதார அபிவிருத்தியின் பலனை நோக்கி செல்வது தொடர்பாக அவதானம் செலுத்தப்படும்.

சூழல் அமைப்புகள் சேவைகள் மற்றும் உயிர்ப் பல்வகைமை தொடர்பாக தகவல்களை உள்ளடக்கிய நில வரைப்படங்களையும் மற்றும் சமுத்திர வரைப்படங்களையும் அடிப்படையாகக்கொண்ட காணிப 'பாவனைத்திட்டம் தயாரித்தலும், அதை அடிப்படையாகக்கொண்டு விவசாய, மீன் பிடி, சுற்றுலா போன்ற பிரிவுகள் ஊடாக பொருளாதாரத் திட்டங்கள் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும் உள்ளிட்ட பல செயற்பாடுகள் இதனூடாக மேற்கொள்ளப்படும்.

சூழல் அமைப்புகள் முகாமைத்துவத்தோடு அபிவிருத்தியை விஸ்தரிப்பதன் ஊடாக இலங்கைக்குள் நீண்டகால நிரத்தர அபிவிருத்தியை உறுதிப்படுத்திக்கொள்வதும் இந்தத்திட்டத்தின் நோக்கமாகும்

# பாதுகாப்பான நாடும் நிரந்தரமான நாளையும்




**சூழல் உணர்த்திறன் பூமி பிரதேசங்களில் உயிர்பல்வகைமை பாதுகாத்தல், வளர்த்தல் மற்றும் சூழல் தொகுதி பணிகளை நடாத்தல்**

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

## உயிர் பல்வகைமையும் இலங்கையும்

இலங்கையின் பூமி பிரதேசம் போலவே கடல் எல்லையும் உலகின் அவதானத்திற்கு உள்வாங்கபட்ட மிக முக்கிய உயர் உயிர்ப் பல்வகைமை கொண்ட பிரதேசமாகும்.
இந்த உயிர்ப்பல்வகைமை மற்றும் சூழல் தொகுதிகளை பாதுகாப்பதற்காக பல்வேறு பாதுகாப்பு வலயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கான விசேட சட்டத்திட்டங்களும் நடைமுறையில் உள்ளன.

ஆனால் சூழல் தொகுதிகளை பாதுக்காப்பதற்கு அது போதுமானதாக அமையவில்லை. அதனால் பாதுகாப்பு வலயங்களிலும் அதற்கு வெளி பிரதேசங்களிலும் தினந்தோறும் சூழலுக்கு பாரிய சேதம் ஏற்படுத்தப்படுகின்றது.
இந்த நிலமையை தடுப்பதற்காக சூழலுக்கு உகந்த புதிய வியூக வழிமுறைகளையும் திட்டங்களையும் தயாரிக்க வேண்டியுள்ளது. சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் பொது மக்களின் வாழ்வாதார வழிமுறையும், வீடுவசதி தேவைகளையும் பூர்த்தி செய்யும் அதேநேரம் யதார்த்தபூர்வமான சூழல் பாதுகாப்பு வழிமுறையை நோக்கி செல்ல வேண்டியுள்ளது.

## சூழல் உணர்திறன் வலயங்கள்

சூழல் உணர்திறன் வலயங்களை உருவாக்கும் புதிய திட்டத்தின் ஊடாக மேற் குறிப்பிடப்பட்ட இலக்குகள் அடையப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
இதன் ஊடாக புதிய காணி பயன்பாட்டு கொள்கையொன்று பிரயோகிக்கப்படும். அதற்கு அமைய சூழல் உணர்திறன் விசேட வலயங்கள் அமைக்கப்படும். அந்த பாதுகாப்பு வலயத்திலும் அதற்கு வெளியிலும் உயிர்ப் பல்வகைமை பாதுக்காக்கப்படும். அதற்காக இந்த வலயத்திற்குள் பாரிய பாதுகாப்பு முறை ஒன்று பயன்படுத்தப்படும். உலக அவதானத்திற்கு உள்ளடக்கப்பட்ட விசேட உயிர்ப் பல்வகைமையை பாதுக்காப்பதற்கான புதிய அணுகுமுறைகளை பயன்படுத்தியே அந்தப் பிரதேசத்தில் பல்வேறு வேலைகளுக்காக பயன்படுத்தப்படும்.

சூழலை பாதுகாத்துக்கொண்டு, இந்த வலயத்தில் வாழ்கின்ற மக்களை அதன் பங்காளர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களின் வாழ்வாதார வழிகளை பாதுக்காப்பது இதன் விசேடத்தன்மையாகும். இந்த திட்டம் கலா ஓயா ஆற்றுத் தளத்தை கேந்திரமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

## கலா ஓயா ஆற்றுத் தளம்

கலா ஓயா ஆற்றுத் தளம் இலங்கையில் உள்ள 103 ஆற்றுத் தளங்களில் ஒன்றாகும். இதில் அகலம் சராசரியாக 25 கிலோ மீற்றராகவும், நீளம் 150 கிலோமீற்றராகவும் காணப்படுகின்றது. கலா ஓயா ஆற்றுத் தளத்திற்கு சொந்தமான பூமியில் 76% உலர் வலய பிரதேசமான வடமேல் மாகாணத்திற்கு சொந்தமானது. கடல் மட்டத்தில் இருந்து 600 மீற்றர் தூரம் வரை பல அளவுகளை கொண்ட உயரங்களில் காணப்படும் இந்த தளம் இலங்கைக்கு சொந்தமான கடல் எல்லை வரை பரந்து காணப்படுவது விசேடத்தன்மையாகும். இதில் சுமார் 600 குளங்கள் காணப்படுகின்றன. அவற்றிற் சில உடைந்த நிலையில் காணப்படுவதோடு ஏனையவை சிறந்த நிலையில் உள்ளது.

வடமத்திய, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் ஊடாக கடந்து செல்லும் கலா ஓயா அந்த பிரதேசத்தை சுற்றி வாழும் மரஞ் செடி கொடி, விலங்குகள் உட்பட அனைத்து சூழலுக்கும் மெருகூட்டுகின்றது. போவதென்ன நீர்த்தேக்கத்தின் ஊடாக விநியோகிக்கும் மகாவலி நீரினால் கலா ஓயா போசனை அடைகின்றது.
புதிய திட்டத்தில் கலா ஓயா சூழல் உணர்திறன் வலயத்திற்கு சுமார் 209,700 ஹெக்ரயர் பூமி பிரதேசத்தை உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள. அதற்காக மேட்டு நிலங்களில் இருந்து ஹெக்ரயரும், இலங்கைக்கு சொந்தமான கடல் பகுதியில் இருந்து 51,000 ஹெக்ரயரும் உள்ளடக்கப்பட உள்ளது.
கலாஓயா ஆற்றுத் தளத்த்திற்கு சொந்தமான மேட்டு நிலம் 158,700 ஹெக்ரயருக்குள், உவர்நீர் சதுப்பு நிலத்தில் 250 ஹெக்ரயரும், கண்டல் காடுகளில் 620 ஹெக்ரயரும், நதியோர வனாந்திரம் 200 ஹெக்ரயரும் அமைந்துள்ளன.

## திட்ட கிராமங்கள்

இந்த திட்டம் 5 வருடத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சியினால் நடைமுறைப்படுத்தும் சூழல் உணர்த்திறன் பூமி பிரதேசங்களில் உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பை முன்னெடுத்து செல்லுதல் மற்றும் சூழல் தொகுதி சேவைகளை மேற்கொள்ளல் திட்டத்திற்காக ருனேீ உதவி வழங்கப்படுவதோடு, புநுகு நிதி உதவி வழங்கப்படுகின்றது.

அதேபோல் திட்டத்தின் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்கள் பங்காளர்களாக செயல்படுகின்றன. தேவையென்றால் அரசசார்பற்ற நிறுவனங்களையும் சம்பந்தப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோல பிரதேச வாசிகள் இந்த திட்டத்தின் முக்கிய பங்குதாரர்கள் ஆவர்.
அந்த வகையில் தேசிய மட்டத்தில் சூழல் தொகுதி முகாமைத்துவப்படுத்துவதோடு அபிவிருத்தி திட்டங்கள் ஒன்றிணைப்பதனூடாக உலக சூழலியல் பலன்களை பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையில் பச்சை பசுமை சூழலியல் வாழ்க்கையும் அபிவிருத்தியினூடாக எதிர் காலத்தில் நிலையான நாட்டை அமைக்க சந்தர்ப்பம் அமையும்.




## பங்குதாரர்கள்

இந்த திட்டம் 5 வருடத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சியினால் நடைமுறைப்படுத்தும் சூழல் உணர்த்திறன் பூமி பிரதேசங்களில் உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பை முன்னெடுத்து செல்லுதல் மற்றும் சூழல் தொகுதி சேவைகளை மேற்கொள்ளல் திட்டத்திற்காக ருனேீ உதவி வழங்கப்படுவதோடு, புநுகு நிதி உதவி வழங்கப்படுகின்றது.

அதேபோல் திட்டத்தின் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்கள் பங்காளர்களாக செயல்படுகின்றன. தேவையென்றால் அரசசார்பற்ற நிறுவனங்களையும் சம்பந்தப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோல பிரதேச வாசிகள் இந்த திட்டத்தின் முக்கிய பங்குதாரர்கள் ஆவர்.
அந்த வகையில் தேசிய மட்டத்தில் சூழல் தொகுதி முகாமைத்துவப்படுத்துவதோடு அபிவிருத்தி திட்டங்கள் ஒன்றிணைப்பதனூடாக உலக சூழலியல் பலன்களை பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையில் பச்சை பசுமை சூழலியல் வாழ்க்கையும் அபிவிருத்தியினூடாக எதிர் காலத்தில் நிலையான நாட்டை அமைக்க சந்தர்ப்பம் அமையும்.

சூழல் திட்டம் மற்றும் பொருளாதாரப் பிரிவு
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு
980/4, விக்கிரமசிங்க வீதி, அதுல் கோட்டை
மேலதிக தகவல் - தீபால் சிரிபத்தன, பணிப்பாளர்
(சூழல் திட்டம் மற்றும் பொருளாதார)
திட்டப்பணிப்பாளர் (நுஞ்யு திட்டம்)
தொலைபேசி - 0112 861 726 பெக்ஸ் - 0112 887 027